JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**S.T.C.152/2018**

**Complainant and Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of **30.01.2025**

**D.W.1 Name: P.Aravind S/o. Palanisamy**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் எ.சா.1 அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் யாருக்கு முதலில் சம்மன் அனுப்பப்பட்டது என்றால் கண்காணிப்பாளருக்கு வந்தது. எனக்கு சாட்சியம் அளிக்க மேற்படி கண்காணிப்பாளர் எனக்கு அதிகாரம் அளித்தாரா என்றால் அளித்தார். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 19.01.2021ம் தேதி என்னை முதலில் நீதிமன்றத்தில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதற்கு முன்னர் 08.01.2021ம் தேதி நீதிமன்றத்தில் முன்னிலையாகியும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கடந்த 19.01.2021ம் தேதி ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக நான் வாய்தா கோரினேன் என்றால் ஆமாம். அதற்கு பின்னிட்டு 04.09.2024ம் தேதிதான் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2) 19.01.2021ம் தேதி ஆவணங்கள் அலுவலகத்தில் இல்லையா என்றால் அலுவலகத்தில் இருந்தது. நீதிமன்றத்திற்கு எடுத்துக் கொண்டு வரவில்லை. ஏன் 3 ஆண்டுகள் காலதாமதமாக மேற்படி ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன் என்றால் அப்போதுதான் சம்மன் வந்தது. மேற்படி ஆவணங்கள் எனது அலுவலகத்தில் யார் பராமரிக்கிறார்கள் என்றால் விற்பனைக்கூட கண்காணிப்பாளர் பராமரிப்பார். யார் அதை எழுதுவார்கள் என்றால் அவருக்கு கீழ் உள்ள சார்பு அலுவலர் எழுதுவார். என்னுடைய வேலை என்னவென்றால் ஏல மேற்பார்வை இடுவதாகும். நானும், சார்பு

அலுவலர்தான். எ.சா.ஆ.1 ஆவணங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுமா என்றால் ஆய்வுக்கு உட்படுத்தப்படாது. எத்தனை ஆவணங்கள் ஏலத்திற்கு பராமரிக்கப்படுகிறது என்றால் பிப்ரவரி 2017 முதல் ஆன்லைன் மூலமாக கணக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. எ.சா.ஆ.1 சம்மந்தப்பட்ட காலத்தில் எவ்வாறு பராமரிக்கப்பட்டது என்றால் ஆன்லைன் மூலமாகத்தான் கணக்கு பராமரிக்கப்பட்டது.

3) ஆன்லைன் மூலமாக பராமரிக்கப்படும் ஆவகணங்கள் எ.சா.ஆ.1 உடன் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பக்கங்கள் அதிகமாக இருப்பதால் சமர்ப்பிக்கப்படவில்லை. என்ன ரகம் என்பது ஆன்லைனில்தான் பராமரிக்கப்பட்டு வருகிறது. மஞ்சள் எவ்வாறு வியாபாரம் செய்யப்படுகிறது என்றால் இருப்பில் வைத்தும், தினசரி வியாபாரம், வாரத்தில் 5 நாட்கள் நடைபெறும். யார் மஞ்சளை வேண்டுமானாலும் கொண்டு வந்து கொடுக்கலாம் என்றால் ஆதார் மற்றும் வங்கி கணக்கு கொடுத்து எங்களிடம் பதிவு செய்தவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொள்ளலாம். அவ்வாறு பதிவு செய்தவர்கள் விவசாயி என உறுதி செய்ய பத்திரம், பட்டா, சிட்டா, அடங்கல் பெறப்படுமா என்றால் இல்லை. ஆதார், வங்கி கணக்கு கொடுத்தால் நாங்கள் பதிவு செய்து கொள்வோம் என்றால் சரிதான். அவர்கள் விவசாயிதான் என்பதை உறுதி செய்வதில்லை என்றால் சரிதான்.

4) ஒருவரே விற்பனை கூடத்தில் பலமுறை ஏலத்தில் கலந்து கொள்ளலாம் என்றால் கலந்து கொள்ளலாம். ஒரே நபர் பலமுறை வியாபாரத்தில் கலந்து கொண்டுள்ளார் என்றால் சரிதான். ஒருவருக்கு பணத்தேவை இருந்தால் பதிவு செய்த வேறு ஒரு நபருக்கு மஞ்சளை விற்பனை செய்யலாம் என்றால் செய்யலாம். நிறைய வியாபாரிகள் விவசாயிகள் என்ற பெயரில் கலந்து கொள்வார்கள் என்றால் அது பற்றி தெரியாது. கொடுமுடியைச் சேர்ந்த அன்பழகன், சுப்பிரமணி, ரவி ஆகியோர்கள் மஞ்சள் வியாபாரிகள் என்றால் அது பற்றி தெரியாது. அவர்கள் எங்களது விற்பனை கூடத்தில் பல தேதிகளில் வியாபாரம் செய்துள்ளார்கள் என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும். 10.08.2017 ம் தேதியில் அன்பழகன், சுப்பிரமணி, ரவி மனைவி ஜோதி ஆகியோர்கள் பெயரில் மஞ்சள் வியாபாரம் நடந்துள்ளது சரிதான். மேற்படி நபர்கள் பல ரகங்கள் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 22.09.2017 ம் தேதி

அன்பழகன் பெயரில் விற்பனை கூடத்திற்கு மஞ்சள் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பல ரகங்கள் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். நாலுவகை ரகங்கள் வாங்குகிறோம்.

5) அன்பழகன், சுப்பிரமணி, ரவி ஆகியோர் துரைசாமி இருக்கும் ஊரில் மஞ்சள் வியாபாரம் செய்து வருகிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது. துரைசாமியிடம் மேற்படி அன்பழகன், சுப்பிரமணி, ரவி ஆகியோர்கள் மஞ்சள் விற்பனை செய்து பணம் வாங்கி கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெருந்துறையில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலம் மஞ்சள், தேங்காய் கொள்முதல் நடைபெறுகிறது என்றால் அது பற்றி தெரியாது. அதற்கு இருப்பு குடோன் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

6) எ.சா.ஆ.1 வரிசை ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படும் ஆவணம் அல்ல என்றும் அது நம்பிக்கைக்குரிய ஆவணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. கூட்டுறவு தனிக்கையாளரால் ஆடிட் செய்யப்பட்டால்தான் அது முறையான ஆவணம் என்றால் சரியல்ல. எங்களுக்கு தணிக்கை உண்டா என்றால் உண்டு. ஆனால் எ.சா.ஆ.1 ஆவணத்தை தணிக்கைக்கு உட்படுத்த மாட்டோம். எ.சா.ஆ.1 ஆவணம் காலகட்டத்தில் நான் பணியில் இல்லை என்றால் சரிதான். துரைசாமி எங்கள் அலுவலகத்திற்கு வந்தாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை (F.A.C.)